


**22. 10. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. இந்தியா அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான நட்புறவு தொடர்ந்து வலுப்பெற்று வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

2. மத்திய அரசின் கொள்கைகளால் உலக வன பரப்பளவில் இந்தியா 9-வது இடத்திற்கு முன்னேறி உள்ளதாக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

3. வடகிழக்கு பருவமழையை ஒட்டி பொதுமக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அலுவலர்கள் முழுவீச்சில் மேற்கொள்ள துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

4. டெல்டா மாவட்டங்களில் இதுவரை 1.6 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.சக்கரபாணி கூறியுள்ளார்.

5. விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கா வண்ணம் கூடுதல் நெல் கொள்முதல் மேற்கொள்ள அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அரசை வலியுறுத்தியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

இந்திய அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான நட்புறவு தொடர்ந்து வலுப்பெற்று வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

தீபாவளி பண்டிகையை ஒட்டி வாழ்த்துக்களை தமக்கு தெரிவித்த அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பிற்கு நன்றி தெரிவித்து பிரதமர் வெளியிட்ட சமூக

வலைதளப்பதிவில் இருபெரும் ஜனநாயக நாடுகளான இந்தியாவும் - அமெரிக்காவும் தொடர்ந்து உலகிற்கு நம்பிக்கை ஒளியை ஏற்படுத்துவதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

தீவிரவாதத்தை அனைத்து நிலைகளிலும் எதிர்க்க இருநாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖

<u>ராஜ்நாத்சிங்</u>

தேசிய கடற்படை தளபதிகளின் இரண்டாவது வருடாந்திர மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்கியது.

ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதல் மற்றும் கடற்படையின் உயர்நிலை செயல்பாடுகள், தயார் நிலையின் பின்னணியில் இந்த 3 நாள் மாநாடு நடைபெறுவது முக்கியத்துவம் பெறுகிறது.

தற்போதைய புவிசார் சூழலில் பன்முக சாவல்களை எதிர்கொள்ளும் வகையில் கடற்படையின் திறன்களை முன்னெடுத்து செல்வதற்கு இந்த மாநாடு ஒரு சிறப்பான வாய்ப்பாக கருதப்படுகிறது.

கடற்படை தளபதிகளிடையே பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் நாளை உரையாற்றுவதோடு, வளர்ச்சியடைந்த பாரத தொலைநோக்கு பார்வையில் தேசிய நலன்கள் குறித்து அவர் விரிவாக விவாதிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய பெருங்கடல் பகுதிகளின் பாதுகாப்பு நிலைமை தொடர்பான திட்டங்களை கடற்படை தலைவர் மற்றும் அதன் இதர தளபதிகள் மறுஆய்வு செய்வதுடன் இதுசார்ந்த திட்டங்களையும் வகுக்கவுள்ளனர்.

நாட்டிற்கு எதிரான சவால்களையும், அச்சுறுத்தல்களையும் உறுதியுடன் எதிர்கொள்ளும் வகையில் ராணுவப்படை, விமானப்படை, கடலோர காவல்படையுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுவதற்கான திட்டங்கள் குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்படும்.

❖❖❖❖❖❖

<u>பூபேந்தர் யாதவ்</u>

மத்திய அரசின் கொள்கைகள் மற்றும் காடுவளர்ப்பு செயல்திட்டங்களால் உலக வன பரப்பளவில் இந்தியா 9-வது இடத்திற்கு முன்னேறியுள்ளதாக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

நீடித்த வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான மத்திய அரசின் அர்ப்பணிப்புமிகு செயல்களால் வனபரப்பு பகுதிகள் அதிகரிப்பு பட்டியலில் இந்தியா 3-வது இடத்தை பெற்றுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அன்னையின் பெயரால் மரம் வளர்ப்போம் என்ற பிரதமர் திரு. நரேந்திரமோடி அறிவித்த திட்டத்தின் மூலம் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு அதிகரித்தததாக எடுத்துரைத்தார்.

இந்த திட்டத்தின் மூலம் தனிநபரும் சமூக அளவிலும் காடுவளர்ப்பு திட்டங்கள் உத்வேகம் பெற்றதாக அமைச்சர் கூறினார்.

வருங்காலங்களில் பசுமை பரப்பை மேலும் அதிகரிக்க இந்த திட்டம் வழிகோலுவதாகவும் திரு.பூபேந்தர் யாதவ் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

<u>வானிலை - மழை</u>

தென்மேற்கு வங்கக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த 12 மணிநேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அடுத்த 12 மணிநேரத்தில் இது வடக்கு தமிழகம், புதுச்சேரி, தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளை நோக்கி நகரக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

திருவள்ளூர் ராணிப்பேட்டை மாவட்டங்களில் இன்று அதிகனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் திரு. செந்தாமரை கண்ணன் தெரிவித்தார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

<u>மழை தமிழ்நாடு</u>

இதனிடையே திருவள்ளூர் மாவட்டம் பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து 4 ஆயிரத்து 500 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 133 இடங்கள் மழையால் பாதிக்கக் கூடியவை என கண்டறியப்பட்டு கண்காணிப்பு முடுக்கிவிடப் பட்டுள்தாக ஆட்சித்தலைவர் திரு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

இதனிடையே விழுப்புரம் மாவட்டத்தில் தொடர்மழையால் மரக்காணம் பகுதியில் 3 ஆயிரத்து 500 உப்பளங்கள் நீரில் மூழ்கி ஏரிபோல் காட்சியளிக்கிறது.

2 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 32 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் முக்கொம்பு மேலணைக்கு வரும் நீரின் அளவு 36 ஆயிரம் கனஅடியாக உள்ளது.

தண்ணீர் அதிகளவு வர வாய்ப்புள்ளதால் காவிரி கொள்ளிட கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்தும் இன்றுகாலை வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், காஞ்சிபுரம் மாவட்டம் சிறுகளத்தூர், காவனூர், குன்றத்தூர், திருமுடிவாக்கம், வழுதியம்பேடு, திருநீர்மலை, அடையாறு ஆறுகளின் கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

..வாய்ஸ் ..

செங்கல்பட்டு மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்ந்து தீவிரமாக உள்ளதால் கூடுவாஞ்சேரி நிரம்பி உபரிநீர் வெளியேற்றப்படுகிறது.

இதனால் அப்பகுதியில் உள்ள குடியிருப்புகள் வெள்ளநீரால் சூழ்ந்துள்ளன.

விழுப்புரம் மாவட்டம் வீடூர் அணையிலிருந்து 500 கனஅடிவீதம் தண்ணீர் திறக்கப்படுவதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

மழை மாவட்டங்கள்

உதகையில் தொடர்மழை காரணமாக பாதுகாப்பு கருதி முக்கிய சுற்றுலா தலங்கள் அனைத்தும் இன்று ஒருநாள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

மயிலாடுதுறையில் வயல்களில் மழைநீர் வடியும் வகையில் வாய்க்கால்களில் ஆகாய தாமரைகளை அகற்றும் பணியில் நீர்வளத்துறை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

சென்னை ஆவடியில் பெய்த மழையால் குடியிருப்பு பகுதியில் மழைநீருடன் கழிவுநீர் கலந்து காணப்படுகிறது.

இதனால் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாயினர்.

கரூர் மாவட்டம் கீழ் குறப்பாளையத்தில் தொடர்மழை காரணமாக சாலையில் மரம் வேரோடு சாய்ந்ததில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

திருவாரூர் மாவட்டத்தில் வெள்ளபாதிப்பு இருக்கும் என கண்டறியப்பட்டுள்ள 176 பகுதிகளில் கண்காணிப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மோகனசந்திரன் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖

உதயநிதி

வடகிழக்கு பருவமழை காலத்தில் பொதுமக்களுக்கு தேவையான உதவிகளை அர்ப்பணிப்புடன் மேற்கொள்ள துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின், அனைத்து துறை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தினார்.

சென்னையில் மழை முன்னேற்பாட்டு பணிகளை இன்று ஆய்வு மேற்கொண்ட அவர், நிவாரண முகாம்கள், பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய துணை முதலமைச்சர், அனைத்து மாவட்டங்களிலும் மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை மாநகரில் 215 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு, ஒருலட்சத்து 47 ஆயிரம் பேருக்கு இன்று காலை உணவு வழங்கப்பட்டதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வாரிய களப்பணியாளர்கள் என 24 ஆயிரத்து 149 பேரும் களப்பணியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அரசு கூறியுள்ளது.

106 உணவுக்கூடங்கள் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு உணவு வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1913 என்ற உதவி எண்ணை தொடர்பு கொண்டு மக்கள் மழை தொடர்பான புகார்களை தெரிவிக்கலாம் என்றும், புகார் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

<u>சக்கரபாணி</u>

தமிழகத்தில் இதுவரை இல்லாத வகையில் நெல் விளைச்சல் நடப்பாண்டு அதிகரித்துள்ளதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

தஞ்சை பிள்ளையார்பட்டி நெல் சேமிப்பு கிடங்கில் அமைச்சர்கள் கோவி. செழியன், திரு.மெய்யநாதன் ஆகியோருடன் இன்று ஆய்வுசெய்தபின் செய்தியாளர்களிடம் பேசியஅவர், நெல்லுக்கான ஆதாரவிலை உயர்த்தப்பட்டுள்ளதாக கூறினார்.

டெல்டா மாவட்டங்களில் இதுவரை 1.6 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖

<u>எடப்பாடி கே.பழனிச்சாமி</u>

தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி இன்று ஆய்வுசெய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை லாரிகள் மூலம் உரிய இடத்திற்கு அனுப்பாததால் நெல் மூட்டைகள் தேங்கி நனைந்து காணப்படுவதாக குற்றம்சாட்டினார்.

விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கா வண்ணம் கூடுதல் நெல் கொள்முதல் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖

<u>கந்த சஷ்டி</u>

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் கந்த சஷ்டி விழா இன்று யாகசாலை பூஜையுடன் தொடங்கியது.

முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் வரும் 27-ம் தேதியும் நடைபெறும்.

இதேபோல் மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு முருகன் திருக்கோவில் உட்பட பல்வேறு முருகன் கோவில்களில் கந்தசஷ்டி விழா இன்று தொடங்கியது.

பழனி அருள்மிகு தண்டாயுதபானி திருக்கோவிலில் கந்த சஷ்டி விழா காப்பு கட்டுதலுடன் இன்று தொடங்கியதாக எமது திண்டுக்கல் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

<u>கிரிக்கெட்</u>

உலக கோப்பை மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா நியூசிலாந்தை நவி மும்பையில் நாளை எதிர்கொள்கிறது.

புள்ளிகள் பட்டியலில் தற்போது 4-வது இடத்தில் உள்ள இந்தியா அடுத்த இரு போட்டிகளிலும் வெற்றி பெற்றால் மட்டுமே அரையிறுதிக்கு முன்னேறமுடியும்.

❖❖❖❖❖❖